**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**கூடுதல் முதன்மை கல்வி அலுவலர்அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு க.முனிசாமி எம்,ஏ.,எம்.எஸ்.சி.,எம்.பி.ஏ.,பி.எட்.,எம்.பில்.,**
**ந.க.எண். 2616/ ஆ2/2022 நாள்: .06.2022**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம் – 2022–23–ம் கல்வி ஆண்டு – ''எண்ணும் எழுத்தும்'' சார்ந்து வட்டார அளவில் பயிற்சி வழங்குதல் – தெளிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை:** 1.இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2411/ஈ2/2021 நாள்:16.05.2021.
2.இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2411/ஈ2/2021 நாள்:30.05.2021.

***********

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம் பார்வை (1) மற்றும் (2) செயல்முறைகளுக்கிணங்க எண்ணும் எழுத்தும் சார்ந்து மாவட்ட மற்றும் ஒன்றிய அளவிலான பயிற்சி வழங்குதல் வழிகாட்டு நெறிமுறைகள் கீழ்கண்டவாறு வழங்கலாகிறது.

மாவட்ட அளவிலான பயிற்சி வழிகாட்டு வழிகாட்டு நெறிமுறைகள் கீழ்கண்டவாறு வழங்கலாகிறது.

**மாவட்ட அளவிலான பயிற்சி வழிகாட்டு நெறிமுறைகள்:**

1. மாவட்ட அளவிலான எண்ணும் எழுத்தும் பயிறிசியானது வேலூர் மாவட்டத்தில் **01.06.2022** மற்றும் **02.06.2022** தேதிகளில் வாணி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி காட்பாடி நடத்தி முடிக்கப்பட்டது.
2. இப்பயிற்சி சிறப்பாக செயல்படுத்திட District Level Organizing Committee கீழ்க்கண்ட உறுப்பினர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவிலான குழு:**

| **உறுப்பினர்கள்** | **பதவி** | **பெயர் மற்றும் முகவரி திரு/திருமதி** |
|---|---|---|
| உதவி திட்ட அலுவலர்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | தலைவர் | திரு S.மகாலிங்கம் |
| ஆசிரியர் பயிற்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் | திருமதி.சி.அலமேலு,<br>திரு.சி.குமார்,<br>திரு.ஆர்.சரவணன். |
| மாவட்ட பயிற்சி ஒருங்கிணைப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் | திரு ஈ. வெங்கோஜி ராவ் DC-SS, திரு.ரவி ITK-DC-SS |
| ஆசிரியர் பயிற்றுநர் | உறுப்பினர் | திரு.மாரி BRTE-BRC வேலூார் நகர் |
| ஆசிரியர் பயிற்றுநர் | உறுப்பினர் | திரு.கன்னியப்பன் BRTE-BRC வேலூார் புறநகர் |

3. அனைத்து ஒன்றிய அளவிலான பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் மாவட்ட அளவிலான பயிற்சியை சிறப்பாக செயல்படுத்திட ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டும். பயிற்சியில் கலந்துகொள்ளும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் முறையான தகவல் அளித்து பயிற்சியில் கலந்துகொள்ள ஏதுவாக அவர்கள் பணிவிடுப்பு செய்ய வேண்டும் என சார்ந்த வட்டார கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**த.பி.பா...**

**ஒன்றிய அளவிலான பயிற்சி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்:**

1. ஒன்றிய அளவிலான பயிற்சிகள் 06.06.2022 முதல் 10.06.2022 வரை ஒவ்வொரு ஒன்றியத்திலும் நடைபெறவுள்ளது. அதற்கான பயிற்சி மையம் Hi-Tech Lab வசதி, LCD Projector வசதி, போக்குவரத்து, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, வகுப்பறை வசதிவுடன் இருப்பதை உறுதி செய்து உயர்நிலை அல்லது மேல்நிலை பள்ளியினை தெரிவு செய்ய வேண்டும். அப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் பயிற்சி நாட்களில் பயிற்சி மையங்களில் அனைத்து உதவிகளையும் செய்து முழு ஒத்துமைப்பும் வழங்கிடவும், Hi-Tech Lab ஆசிரியர் வருகை புரிந்து உதவிடச் செய்ய வேண்டும்.

2. ஒன்றிய அளவிலான பயிற்சி சார்ந்து திட்டமிடவும், TLM தயாரிக்கவும் 03.06.2022 மற்றும் 04.06.2022 தேதிகளில் பயிற்சி பெற்ற கருத்தாளர்களும், ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் Drawing Teachers குறைந்தது 5 பேரும் அந்தந்த ஒன்றியத்தில் பயிற்சி மையத்தில் மேற்கொள்ள வேண்டும்.

**ஒன்றிய அளவிலான குழு:**

| உறுப்பினர்கள் | பதவி | பெயர் மற்றும் முகவரி<br>திரு/திருமதி |
|---|---|---|
| மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இராணிப்பேட்டை | முதுநிலை விரிவுரையாளர்/ விரிவுரையாளர் | திருமதி.சி.அலமேலு,<br>திரு.சி.குமார்,<br>திரு.ஆர்.சரவணன். |
| மாவட்ட கல்வி அலுவலர் | மாவட்ட கல்வி அலுவலர் | |
| வட்டார கல்வி அலுவலகர் | வட்டார கல்வி அலுவலகர் | |
| வட்டார வள மைய மேற்பார்வையாளர் | ஒருங்கிணைப்பாளர் | |
| ஆசிரியர் பயிற்றுநர் | உறுப்பினர் | |
| ஆசிரியர் பயிற்றுநர் | உறுப்பினர் | |
| ஆசிரியர் பயிற்றுநர் | உறுப்பினர் | |

3. மேற்கண்ட அட்டவணை சார்ந்த உறுப்பினர்கள் 06.06.2022 முதல் 10.06.2022 வரை அனைத்து ஒன்றியங்களிலும் பணியாற்றும் வகுப்பு 1 முதல் 3 வரை கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மையத்தில் பயிற்சியில் தவறாது கலந்துகொள்ள செய்ய ஏதுவாக தகவல் முறையாக அனுப்ப வேண்டும். இப்பயிற்சியினை மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் உதவி திட்ட அலுவலர் மேற்பார்வையிட வேண்டும் என்று கேட்டுக்கெள்ளப்படுகிறது. இப்பயிற்சியை வட்டார கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் இணைந்து ஒன்றிய அளவில் எவ்வித தொய்வும் இல்லாமல் பயிற்சியை நடத்திட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்.xxxxxx**
**கூடுதல் முதன்மை கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

**பெறுநர்:**
1. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

**நகல்: 1 .** முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம். – அவர்களுக்கு கனிவுடன்அனுப்பலாகிறது)
**2.** மாவட்ட கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் (துகவலுக்காகவும், தக்க ஏற்பாடுகள் செய்வதற்காகவும் அனுப்பலாகிறது)